கொள்ளக்கூடாது என்பது என் சொந்த அபிப்பிராயம். பிரதம மந்திரி போன்ற ஒரு தலைவர் வரும்போது ஏற்கனவே இருந்தால் இருக்கட்டும். அதற்காகப் புதுக் கொடி கட்டுவது, அதுவும் ரோட்டில் கட்டுவது தவறு என்று சொன்னேன்.

திரு. எம். எஸ். மணி : பிரதமர் வந்தபோது காங்கிரஸ் கட்சிக் கொடிகள், கிழிந்த கொடிகள் கட்டப்பட்டிருந்தாலும் அல்லது சரியாகக் கட்டப்படாமல் இருந்தாலும் அதுவும் அவிழ்க்கப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்தக் கட்சி கொடியாக இருந்தாலும் கிழிந்தது, கலர் போனதாக இருந்தால் அதையெல்லாம் அகற்றப் பட்டன.

திரு. முனு. ஆதி : பஞ்சாயத்து யூனியன் நிகழ்ச்சிகளில் அமைச்சர் கள் கலந்து கொள்கிறபோது காங்கிரஸ் கொடியை ஏற்றுகிறார்கள். அதுவும் தேசீயக் கொடி என்று கூறி தகராறு இருக்கிறது. ஆகவே பஞ்சாயத்து நிகழ்ச்சிகளில் அமைச்சர்கள் கலந்து கொள்ள வரும்போது கட்சிக் கொடி கூடாது என்று சொல்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்து நிகழ்ச்சிகளில் கட்சிக் கொடி கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து, என் கருத்தும் கூட.

பஸ் கட்டண உயர்வு

* 351 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் பஸ் கட்டணத்தை உயர்த்திக்கொள்ள அனுமதிக்குமாறு பஸ் முதலாளிகள் அரசாங்கத்துக்கு விண்ணப்பம் செய்து கொண்டுள்ளார்களா ?

(இ) அரசாங்கம் அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டதா?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The hon. Member is referred to the preliminary notification containing proposals for revision of maximum rates of bus fare published at pages 2064–2065 of Part II—Section 1 of the *Fort St. George Gazette*, dated 28th August 1963, for eliciting suggestions or objections as required under section 43 (1) of the Motor Vehicles Act. The representations received in this regard are under the consideration of the Government.

புலவர் கா. கோவிந்தன் : இயல்பாகவே பஸ்காரர்கள் கட்டணங்களை உயர்த்தியிருக்கிறார்கள். மேலும் உயர்த்துவது என்றால் பொதுமக்களுக்கு கேடு பயப்பதாகயிருக்கும். ஆகவே அதற்கு சர்க்கார் இணங்காது என்ற கருத்தைத் தெரிவிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்ற வாரம்தான் இதுபற்றி விரிவான விவாதம் இங்கே நடந்தது. அந்த விவாதத்தில் சில கனம் அங்கத்தினர்கள் கணக்குகள், புள்ளிவிவரங்கள் எல்லாம் கொடுத்தார்கள். வரி அதிகரித்துவிட்டது, எண்ணெய் விலை அதிகரித்துவிட்டது, எப்படி கட்டு படியாகவில்லை என்றெல்லாம் கூறினார்கள். இதையெல்லாம் பரிசீலனை செய்து இதற்கு சட்டப்படி ஸ்டாட்யூடரி அதாரிட்டி இருக்கிறார்கள். அவர்கள் முடிவு செய்வார்கள். இதை சர்க்கார் முடிவு செய்யவில்லை.

கீழ்க்கரந்தையில் போலீஸ் அவுட் போஸ்ட்

* 352 கேள்வி.—**திரு. டி. கடம்பவனசுந்தரம் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் புதூர் சரகம் கீழ்கரந்தையில் ஒரு போலீஸ் அவுட்போஸ்ட் திறக்கக் கோரி அவ்வூர் பஞ்சாயத்து தலைவரிடமிருந்து மனு ஒன்று சர்க்காருக்கு வந்திருக்கிறதா ?

21st March 1964]

(இ) ஆமெனில், அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes.

(b) The request of the villagers was examined and it was considered that there was no need to open an out-post at Keelkaranthai.

(அ) ஆம். வந்துள்ளது.

(இ) இந்தக் கிராம மக்களின் கோரிக்கை பரிசீலனை செய்யப் பட்டது. கீழ்க்கரந்தையில் ஒரு போலீஸ் அவுட்போஸ்ட் திறக்கவேண்டிய அவசியமில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. வி. எஸ். எஸ். மணி : போலீஸ் அவுட் போஸ்ட்கள் எந்த அடிப் படையில் திறக்கப்படுகிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : ஜாஸ்தி ஜனத் தொகை இருந்து ஜாஸ்தி களவுகள் போய்க்கொண்டிருந்தால், அல்லது அக்கிரமங்கள் இருந்தால் அப்பேர்ப்பட்ட இடங்களில் அவுட்போஸ்ட்ஸ் திறந்து மக்களுக்கு ஆதரவு அளிக்கப்படுகிறது.

திரு. ம. கமலநாதன் : தமிழ்நாட்டில் எவ்வளவு ஜனத்தொகைக்கு ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது என அறிய விரும்புகிறேன்?

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. இரா. நாரராயணன் : போலீஸ் ஸ்டேஷன்கள் அமைப்பது மைலேஜ் தூரத்திலா அல்லது குற்றங்கள் அடிப்படையில் புதிதாக ஸ்டேஷன்ஸ் அமைக்கப்படுகிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஜனத் தொகையைப் பார்த்து, தூரத்தை யும் பார்த்துதான் பரிசீலனை செய்து முடிவிற்கு வருவார்கள்.

திரு. ரா. கு. வீரப்ப செட்டியார் : மதுவிலக்கு கேஸ்கள் அதிகமாக நடந்து வருவதால் அந்த அடிப்படையில் போலீஸ் ஸ்டேஷன்கள் ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே இருந்து வருகிறது. எடுத்த தற்கெல்லாம் போலீஸ் ஸ்டேஷன் வைப்பதில்லை. அவசியமிருந்தால், முக்கியமானதாக இருந்தால் வைக்கப்படுகிறது. திருட்டுச் சாராயம் காய்ச்சு கிறார்கள் என்பதற்காக அவுட் போஸ்ட்ஸ் எல்லாம் வைத்துக் கொண்டு வரமாட்டார்கள்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : குற்றம் கொடுமைகள் அதிகமாக நடைபெறுகிற இடங்களில்தான் காவல் நிலையங்கள் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நடைபெறும் என்பதற்கு முன்பே அது நடைபெறாமல் தடுக்கிற வகையில் அங்கே போதிய காவல் நிலையங்கள் ஏற்படுத்த சர்க்காருக்கு உத்தேசமுண்டா ? அதுபோன்று வந்திருப் பவை எல்லாம் ஏன் இதுவரை கவனிக்கப்படாமல் இருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. இரா. நாரராயணன் : பஞ்சாயத்து யூனியன் உள்ள ஒவ்வொரு இடங்களிலும் புதிதாக போலீஸ் ஸ்டேஷன் அமைக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எல்லாப் பஞ்சாயத்து யூனியனிலும் வைக்க முடியாது. எங்கு அவசியம் வைக்கவேண்டுமென்று அரசாங்கம் கருது கிறதோ, அங்கு வைக்கப்படும்.